12.08.2022
O.S. 177/2018

P.W.1- கலா

**<u>D2.D4</u>** <u>தரப்பில் கு.வி.</u>

நான் என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சொத்தில் பங்கு கேட்டு தாக்கல் செய்திருக்கின்றேன். என் தகப்பனார் மற்றும் சகோதர, சகோதரிகளிடம் நான் பாகம் கேட்டிருக்கிறேன். 1/6 பாகம் கேட்டு வழக்கினை தாக்கல் செய்திருக்கின்றேன். இவ்வழக்கின் 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கும் நான் கேட்டுள்ளதுபோலவே 1/6 பாகம் கிடைப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

**<u>D1</u>** <u>கு.வி</u>

நான் திருமண நாளில் இருந்து என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில்தான் தொடர்ந்து வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் நாராயணன் என்னை யுஜி படிப்பு வரை படிக்கவைத்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய பாட்டனார் விஜயகோபால் அவர்களுடைய பூர்வீக குடியிருப்பு ராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் தாலுகா, சித்திரக்குடி என்று சொன்னால் சரிதான். அந்த பகுதி வறட்சியான பகுதி என்று சொன்னால் அங்கு விவசாயம் அரிசு, உழுந்து ஆகிய விளைச்சல் நன்றாகத்தான் இருக்கும். என் பாட்டனாருக்கு 6 குழந்தைகள் என்றால் சரிதான். என்னுடைய தகப்பனார் அவருடைய 15 வயதிலேயே இலங்கைக்கு பிழைக்கச்சென்றுவிட்டார் என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. என்னுடைய தகப்பனார் இலங்கைக்கு சென்று சுமார் 17 வருடங்கள் அங்கு ஓட்டலில் வேலை பார்த்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தாயாரை திருமணம் செய்ததற்கு பின்னிட்டுக்கூட இலங்கைக்கு சென்று வேலை பார்த்தார் என்றால் தெரியாது. என் தகப்பனார் பம்பாய்க்கு வேலைக்கு போனதும் தெரியாது. என்னுடைய தகப்பனார், இலங்கையிலும், பம்பாயிலும் வேலை பார்த்தார் என்று குறிப்பிட்டுள்ள விவரத்தினை மறுத்து நான் பதில் உரை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ஆரம்பத்தில் என் தகப்பனார் ஒத்திக்கு குடியிருந்த விவரம் தெரியுமா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய தாயார் எனக்குத் தெரிந்து இட்லி வியாபாரம் செய்யவில்லை. என் தகப்பனார் பழனி ரோட்டில் ஆரியபவன் ஓட்டலில் வேலை பார்த்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தகப்பனார் அந்த இடத்தில் ஒரு பெட்டிக்கடை வைத்திருந்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனார் வேலைபார்த்த ஆர்யபவன் ஓட்டலில் நல்ல வியாபாரம் இருக்கும் என்றால் இருக்கும். என் தகப்பனாருக்கு அந்த பெட்டிக்கடையின் மூலமாக நல்ல வருமானம் வந்தது என்று சொன்னால் வரவில்லை. என்னுடைய தகப்பனார் பான் புரோக்கர் லைசென்ஸ் எடுத்து வட்டித்தொழில் செய்து வந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. என்னுடைய தகப்பனார் தாவா 1 வது அயிட்டச் சொத்தினை அவரது வருமானத்தைக் கொண்டு 23.5.1974 ல் கிரையம் பெற்றார் என்று சொன்னால் நான் அதற்கு பின்னிட்டுத்தான் பிறந்தேன் என்பதால் அதைப்பற்றி தெரியவில்லை. தாவா 1 வது இலக்கச்சொத்து ஓட்டுவீடு என்று சொன்னால் சரிதான். வள்ளியப்ப செட்டியார் மனைவி முத்தம்மாள் என்பவரிடம் என் தகப்பனார்

அந்த வீட்டை அடமானம் வைத்து கடன் பெற்று வீட்டை கட்டி பின்னர் அந்த கடனை அடைத்து விட்டார் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. தாவா 2 வது அயிட்டச் சொத்தில் ஒரு பகுதியை என்னுடைய தாயார் பெயரில் என் தகப்பனார் கிரையம் வாங்கிய விவரம் எனக்குத் தெரியும். 1975 முதல் 1997 வரை 1 ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் திண்டுக்கல் நகர கூட்டுறவு வங்கியில் பலமுறை கடன்கள் பெற்று அந்த கடன்களை அடைத்து வந்தார்கள் என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. திண்டுக்கல் நகர கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை கொண்டுதான் 2 வது இலக்கச்சொத்தின் ஒரு பகுதி சொத்தினை கிரையம் பெற்றார் என்றால் இரண்டு அயிட்டச் சொத்தையும் ஒன்றாகத்தான் வாங்கப்பட்டது. 2000 வருடத்திற்கு பின்னிட்டு எனது தகப்பனாருக்கு வருமானம் குறைய ஆரம்பித்தது என்று சொன்னால் எப்போதுமே வருமானம் குறைவாகத்தான் இருந்தது. எனது தகப்பனார் பெட்டிக்கடையிலேயே ஒரு பகுதியில் எஸ்டிடி பூத் வைத்து நடத்திக்கொண்டிருந்தார் என்றால் அது அப்பா வைத்ததா தம்பி பேரில் வைத்ததா என்று தெரியாது, என்னிடம் சொல்லும்போது அது நம்முடையது இல்லை என்று சொன்னார். 5 ம் பிரதிவாதி மணிகண்டன் தாலுகா ஆபிஸ் ரோட்டில் இருந்த எம்சிஎஸ்.காம்ப்ளக்சில் ஒரு ஜெராக்ஸ் கடையும் ஒரு எஸ்டிடி பூத்தும் வைத்திருந்தார் என்றால் வைத்திருந்தார். சாட்சி தாமே கூறுகிறார் அந்த கடையை ஒரு வருடம் கூட வைத்திருக்கவில்லை. என்னுடைய தகப்பனார் அவருக்கு கடன் இருந்ததாலும், எங்களுக்கு பண உதவி செய்யவேண்டும் என்பதாலும் ஒரு அயிட்டச்சொத்தை விற்க முற்பட்டாரா என்றால் ஒத்திக்கு வைப்பதாகச் சொன்னார். 2 வது அயிட்டச்சொத்தினை 7 ம் பிரதிவாதிக்கு என் தாய் தகப்பனார் இருவரும் சேர்ந்து விற்று வாதசாஆ.3 கிரையப்பத்திரம் எழுதிக்கொடுத்தார்களா என்றால் எனக்குத் தெரியாது. வாதசாஆ.3 ல் உள்ள தற்போது என்னிடம் காட்டப்படும் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான்.

வழக்குரைஞரின் வேண்டுகோளின்பேரில் மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

V R LATHA
Digitally signed by V R LATHA
Date: 2022.08.17 10:22:04 +0530

Prl.District Judge,
Dindigul.